**தித்வா அனர்த்த நிலைமை காரணமாக மத்திய மாகாணத்தில் ஏற்பட்டுள்ள சேதங்களை சீரமைப்பதற்குத் தேவையான மேலதிக பணியாளர்களுக்காக, தொழில்நுட்ப சேவையின் (சிவில்) தொழில் வாய்ப்பிற்காக ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்தல் – 2026**

தித்வா அனர்த்த நிலைமை காரணமாக மத்திய மாகாண சபையின் கீழுள்ள நிறுவனங்களினால் பராமரிக்கப்பட்ட பௌதீக வளங்களுக்கு ஏற்பட்டுள்ள சேதங்களை சீர்செய்வதற்குத் தேவையான தற்காலிக பணியாளர்களுக்காக, தொழில்நுட்ப சேவையின் (சிவில்) பதவியில் 50 வேலை வாய்ப்புக்களை ஒப்பந்த அடிப்படையில் வழங்குவதற்காக நாடுபூராகவும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (மத்திய மாகாண பொறியியல் சேவைகள் திணைக்களத்திற்கு 20, மத்திய மாகாண நீர்ப்பாசன திணைக்களத்திற்கு 10 மற்றும் மத்திய மாகாண உள்ளூராட்சி திணைக்களத்திற்கு 20 என்ற வகையில்)

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி **2026.07.31** ஆகும்.

1. **பொதுத் தகைமைகள் :-**

1.1. விண்ணப்பதாரர் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
1.2. 2026.07.31 ஆம் திகதியன்று 21 வயதிற்கு குறையாதவராகவும் 30 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (2005.07.31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1996.07.31 ஆம் திகதி அல்லது அதற்குப் பின்னர் பிறந்தவர்கள் மாத்திரமே இதற்கு விண்ணப்பிக்க முடியும்.)
1.3. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் மத்திய மாகாணத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றுவதற்கும் பதவியிலுள்ள கடமைகளை நிறைவேற்றுவதற்கும் உடல், உள ஆரோக்கியத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
1.4. இலங்கையின் எந்தவொரு பிரதேசத்தில் வசிப்பவருக்கும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.
1.5. ஏதேனுமொரு சமயமொன்றின் துறவியாக உள்ள எந்தவொரு நபரும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கத் தகைமையற்றவராவார்
1.6. ஆட்சேர்ப்பு செய்வதற்கு அவசியமான அனைத்து தகைமைகள் மற்றும் நிபந்தனைகளை, அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்யுமாறு இவ்வறித்தலில் குறிப்பிட்டுள்ள திகதிக்கு எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

2. **தகைமைகள் :-**

2.1. கல்வித் தகைமைகள் மற்றும் தொழிற்றகைமைகள்: -
*அனைத்து கல்வி மற்றும் தொழில் தகைமைகளை **2026.07.31** ஆம் திகதிக்குப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

| பதவி | கல்வித் தகைமைகள் | | தொழில் (தொழிநுட்ப) தகைமைகள் |
|---|---|---|---|
| | க.பொ.த. (சா.த.) பரீட்சையில் கொண்டிருக்க வேண்டிய தகைமைகள் | க.பொ.த. (உ.த.) பரீட்சையில் கொண்டிருக்க வேண்டிய தகைமைகள் | |
| 2.1. மத்திய மாகாண தொழிநுட்ப சேவையில் (சிவில்) ஒப்பந்த அடிப்படையில் | கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் அத்துடன் வேறு ஏதேனும் ஒரு பாடத்திற்குச் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் | 1. கல்விப் பொதுத் தராதர (உயர் தரப்) பரீட்சையில், பௌதீக விஞ்ஞானப் பிரிவின் கீழ் இணைந்த கணிதம், இரசாயனவியல், பௌதீகவியல், உயர் கணிதம் ஆகிய பாடங்களில் யாதேனும் மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல். (சாதாரண பொதுப்பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர்ந்து)<br><br>அல்லது | 1. மொரட்டுவ பல்கலைக்கழகத்தினால் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (N.D.T.)<br>அல்லது<br>2. தேசிய தொழில் பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சியளிக்கும் அதிகார சபையினால் (NAITA) வழங்கப்படும் தேசிய பொறியியல் விஞ்ஞான டிப்ளோமா<br>அல்லது<br>3. கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் விஞ்ஞான டிப்ளோமா |

| | | | |
|---|---|---|---|
| | | 2. கல்விப் பொதுத் தராதர (உயர் தரப்) பரீட்சையில், பொறியியல் தொழில்நுட்ப பிரிவின் கீழ் பொறியியல் தொழில்நுட்பம், தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் ஆகிய இரண்டு பாடங்கள் உள்ளடங்களாக மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல். (சாதாரண பொதுப்பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர்ந்து) | அல்லது<br>4. இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்ப டிப்ளோமா<br>அல்லது<br>5. இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தினால் நடாத்தப்படும் பொறியியலாளர் பரீட்சையில் முதலாம் பகுதியினை பூர்த்தி செய்திருத்தல்<br>அல்லது<br>6. தொழில் துறையுடன் தொடர்புடைய தேசிய தொழில் தேர்ச்சி மட்டம் (NVQ) 06 இற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்<br>அல்லது<br>7. உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்குறிப்பிட்ட தொழிநுட்ப சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்களிடமிருந்து கருத்துக்களைப் பெற்றதன் பின்னர் மேலே குறிப்பிட்ட தொழிநுட்ப தகைமைகளுக்கு எல்லா வகையிலும் சமனானது என்று மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் வேறு ஏதேனும் தொழிநுட்ப தகைமைகளைப் பெற்றிருத்தல்<br><br>*ஆட்சேர்ப்பு திட்டத்தில் குறிப்பிட்டுள்ள மேற்குறிப்பிட்ட தகைமைகளுக்குப் பதிலாக பொது நிருவாக சுற்றறிக்கை 46/90 இல் குறிப்பிட்டுள்ள தகைமைகளும் பொருந்தும் |

3. **சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்:-**

3.1. இங்கு இணைப்பு இல. 01 இன் மூலம் தரப்பட்டுள்ள விண்ணப்பப்படிவம்
3.2. பிறப்புச் சான்றிதழின் சான்றுபடுத்தப்பட்ட பிரதி
3.3. தேசிய அடையாள அட்டையின் சான்றுபடுத்தப்பட்ட பிரதி
3.4. கல்விச் சான்றிதழ்களின் சான்றுபடுத்தப்பட்ட பிரதிகள்
3.5. தொழிற்றகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களின் சான்றுபடுத்தப்பட்ட பிரதிகள்

4. **ஆட்சேர்ப்பு முறை**

4.1. கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை, நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையை விடக் குறைவாக இருக்குமிடத்து, தகைமைகளைப் பரீட்சிக்கும் நேர்முகப் பரீட்சையின் மூலமாகவும், கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கையை விட அதிகமாக இருக்குமிடத்து, கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் மூலமாகவும், ஒப்பந்த அடிப்படையில் இப்பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

5. **சேவை நிபந்தனைகள்** :-

5.1. தித்வா அனர்த்த நிலைமை காரணமாக மத்திய மாகாணத்தினுள் ஏற்பட்டுள்ள சேதங்களை சீர்செய்யும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டத்திற்குத் தேவையான மேலதிக பணியாளர்களுக்காக மாத்திரம் ஒப்பந்த அடிப்படையிலான இந்த ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

5.2. 2026.12.31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்கு மாத்திரமே ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படுவர். தேவைப்படும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும், இந்த ஒப்பந்த அடிப்படையிலான நியமனத்தை இரத்துச் செய்வதற்கு மத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

5.3. இதற்காக விண்ணப்பிக்கும் அனைவரும் ஒப்பந்த அடிப்படையில் கட்டாயம் சேவைக்கு அமர்த்தப்படுவார் எனக் கருதப்படக் கூடாது.

6. **சம்பள அளவுத்திட்டம்** :

இப்பதவிக்காக 2025.03.25 ஆம் திகதிய 10/2025 ஆம் இலக்க பொது நிருவாக சுற்று நிருபத்தின் உப அட்டவணை II இற்கமைய, தொழில்நுட்ப உத்தியோகத்தர் தரம் III பதவியிக்குரிய MN 03-2025 சம்பளத் தொகுதியின் ஆரம்ப சம்பளப் படியான ரூபா. 52,250/- மாதாந்த கொடுப்பனவாக வழங்கப்படும். எவ்வாறாயினும், சுற்றறிக்கையின் விதிகளுக்கமைய, அதன் உப அட்டவணை III இல் குறிப்பிட்டுள்ளவாறு உங்களுக்கான கொடுப்பனவுகள் மேற்கொளப்படுவதுடன், ஒப்பந்தக் கொடுப்பனவுடன் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவும் சேர்த்து வழங்கப்படும்.

7. மாதிரி படிவத்திற்கேற்ப தயாரிக்கப்பட்டு பூரணப்படுத்தப்படும் விண்ணப்பங்கள் “**செயலாளர், மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு, இல 244, கடுகஸ்தோட்டை வீதி, கண்டி**” என்ற முகவரிக்கு **2026.07.31** ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை பற்றி அறியத்தரமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் “**தித்வா அனர்த்த நிலைமை காரணமாக மத்திய மாகாணத்தில் ஏற்பட்டுள்ள சேதங்களை சீரமைப்பதற்குத் தேவையான மேலதிக பணியாளர்களுக்காக, தொழில்நுட்ப சேவையின் (சிவில்) தொழில் வாய்ப்பிற்காக ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்தல் – 2026”** எனக் குறிப்பிடல் வேண்டும். குறித்த திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் மற்றும் முழுமையுறாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். தபாலில் தொலைந்த விண்ணப்பங்கள் சம்பந்தமாக இவ்வாணைக்குழு பொறுப்புக் கூற மாட்டாது.

8. இவ்வறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ள / வெளியிடப்படாத விடயங்கள் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பிக்கும் எண்ணிக்கைத் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் என்பன மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவிற்குரியதாகும். மேலும், இந்த அறிவிப்பில் ஏற்பாடு செய்யப்படாத ஏதேனும் விடயம் இருப்பின், அது குறித்து தெளிவுபடுத்துவது / முடிவெடுப்பது மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் பொறுப்பாகும்.

9. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழியிலான அறிவித்தலுக்கிடையில் ஏதேனும் முரண்பாடுகள் காணப்படும் பட்சத்தில் சிங்கள அறிவித்தலே மேலோங்குதல் வேண்டும்.

மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

கே.கே.ஜி.ஐ.டி.பீ. விஜேதிலக,<br>
செயலாளர்,<br>
மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு,<br>
மத்திய மாகாண சபை.

2026 ஜுலை மாதம் 17 ஆம் திகதி,<br>
மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு,<br>
இல. 244, கடுகஸ்தோட்டை வீதி,<br>
கண்டி